Prostate cancer: testing and treatment – what you need to know

Tamil

# ஆண்மைச் சுரப்பிப் புற்றுநோய்: பரிசோதனை மற்றும் சிகிச்சை – நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது என்ன


**இந்த மெய்த்தகவல் தாள் மருத்துவர்களிடம் அல்லது செவிலியர்களிடம் உரையாடுவதற்கு நிகரானது இல்லை. தயவுசெய்து நீங்கள் கேட்க விரும்பும் கேள்விகளுக்கு ஒரு வழிகாட்டியாக இதைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.**

**ஆண்மைச் சுரப்பி என்றால் என்ன?**

ஆண்மைச் சுரப்பி என்பது ஆண்களிடம் காணப்படும் ஒரு பாலியல் சுரப்பி ஆகும்.

இது சிறுநீர்ப் பையின் கீழ் அமைந்திருக்கிறது. இது ஆண்குறியின் அடிப்பாகத்தின் பின்வழியின் (மலக்குடல்) முற்பகுதியில் அமைந்துள்ளது. இது பொதுவாக ஒரு பாதாம் கொட்டை அளவில் இருக்கும். இது விந்துநீரில் உள்ள திரவங்களில் சிலவற்றை உருவாக்குகிறது.

ஆண்மைச் சுரப்பியின் நடுவில் ஒரு குறுகிய துளை உள்ளது. சிறுநீர்ப்பையிலிருந்து சிறுநீரை வெளியேற்றும் குழாய் (சிறுநீர்க் வெளிக்குழாய்) இந்தத் துளையின் வழியாகச் சென்று ஆண்குறியின் முடிவு வரை செல்கிறது.




**எனக்கு ஆண்மைச் சுரப்பிப் புற்றுநோய்க்கான அபாயம் உள்ளதா?**

ஆண்மைச் சுரப்பிப் புற்றுநோய் பெரும்பாலும் 65 வயதுக்கு மேற்பட்ட ஆண்களைப் பாதிக்கிறது. 45 வயதுக்குக் குறைவான ஆண்களிடம் இதைக் காண்பது மிக அரிதாகும்.

வயதாவதும், அத்துடன் ஆண்மைச் சுரப்பிப் புற்றுநோய் உள்ள தந்தையோ, சகோதரனோ இருப்பதும் (அதிலும் அவர்களுக்கு அந்நோய் 60 வயதுக்குள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தால்), உங்களுக்கு ஆண்மைச் சுரப்பிப் புற்றுநோய் ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கிறது.

**எனக்கு ஆண்மைச் சுரப்பிப் பிரச்சினை இருக்கிறது என்பதை எப்படி அறிந்து கொள்வது?**

50 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்குப் பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிரச்சினைகள் இருப்பது சர்வ சாதாரணமாகும்:

- அடிக்கடிச் சிறுநீர் கழிக்கும் தேவை இருத்தல்
- எந்த ஒரு சமயத்திலும் திடீரெனச் சிறுநீர் கழிக்கும் தேவை ஏற்படுதல்
- தொடங்குவதற்குச் சிரமம் ஏற்படுதல்
- அதிகநேரம் எடுத்தல் - ஏனென்றால் சிறுநீர்த் தாரை பலவீனமாக வருதல் அல்லது விட்டு விட்டு வருதல்
- நீங்கள் முடித்து விட்ட பிறகும் சிறுநீர் சொட்டு சொட்டாக வடிதல்.

பெரும்பாலான சமயங்களில், இந்த அறிகுறிகள் புற்றுநோய் அல்லாத, வீங்கிய ஆண்மைச் சுரப்பியால் (வயதான ஆண்களுக்கு ஏற்படும் பொதுவான பிரச்சினை) ஏற்படுகிறது. வீங்கிய ஆண்மைச் சுரப்பி, ஆண்மைச் சுரப்பிப் புற்றுநோய்க்குக் கொண்டு செல்லாது. இருப்பினும், இந்த அறிகுறிகளில் ஏதாவது உங்களுக்கு இருந்தால் உங்கள் மருத்துவரிடம் பேசுவது நல்லது.

**எனக்கு ஆண்மைச் சுரப்பிப் புற்றுநோய் இருந்தால் மருத்துவர் என்ன செய்வார்?**

முதலாவதாக, பிரச்சினையை உண்டாக்குவது எது என்பதை மருத்துவர் கண்டுபிடிக்க வேண்டும். அதற்கு மருத்துவ சோதனைகள் தேவைப்படும். அதில் பின்வருபவை அடங்கும்:

***டிஜிடல் ஆசனவாய்ப் பரிசோதனை***
மருத்துவர் உங்கள் பின்வழி (மலக்குடல்) வழியாகக் கையுறையணிந்த விரலை உள்ளே நுழைத்து உங்கள் ஆண்மைச்சுரப்பியில் உள்ள மாற்றங்களைக் கணிப்பார்

***ஆண்மைச் சுரப்பியின் குறிப்பிட்ட ஆன்டிஜன் (PSA) பரிசோதனை***
விந்துக்குச் சத்தூட்டுவதற்காக ***PSA*** என்று அழைக்கப்படும் ஒரு புரதச்சத்து ஆண்மைச் சுரப்பியில் தயாரிக்கப்படுகிறது. பொதுவாகச் சிறு அளவிலான ***PSA*** மட்டும் இரத்த ஓட்டத்தில் கலக்கிறது. பெரும் அளவிலான ***PSA*** இரத்தத்தில் இருந்தால், அது ஆண்மைச் சுரப்பிப் புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம். ஆனால் எப்போதும் அப்படியல்ல.

நீங்கள் வயதாக வயதாக ***PSA*** அளவுகள் அதிகரித்துக் கொண்டே போவதற்குப் பின்வரும் காரணங்கள் இருக்கக்கூடும்:

- வீக்கம்
- நோய்த் தொற்றுகள்
- புற்றுநோய் காரணமின்றி வேறு ஆண்மைச் சுரப்பி நிலைகள்.

***PSA*** பரிசோதனை என்பது இரத்தத்தில் எவ்வளவு ***PSA*** இருக்கிறது என்பதைக் காண்பிக்கும் இரத்தப் பரிசோதனை ஆகும். உங்கள் இரத்தத்தில் ***PSA*** அதிகமான அளவில் இருந்தால், அது ஏன் என்பதைக் கண்டறிய மருத்துவர் மேலும் பரிசோதனைகள் செய்ய வேண்டியிருக்கும்.

***உயிர்த்திசுப் பரிசோதனை (Biopsy)***

உங்கள் ***PSA*** பரிசோதனை அல்லது டிஜிடல் ஆசனவாய்ப் பரிசோதனை வித்தியாசமாக இருந்தால், உங்கள் மருத்துவர் உங்களை சிறுநீரக மருத்துவர் எனப்படும் சிறப்பு நிபுணரிடம் பரிந்துரை செய்வார். சிறுநீரக மருத்துவர் ஒரு உயிர்த்திசுப் பரிசோதனைக்கு பரிந்துரைக்கலாம். இதில் ஒரு சிறு ஊடொலி நுழைகோல் (ultrasound probe) உங்கள் பின்வழியில் வைக்கப்படும். அதன்பின் வழக்கம் போல ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட மாதிரிகள் உங்கள் ஆண்மைச் சுரப்பியிலிருந்து எடுக்கப்படும். இவைகள் நுண்ணோக்கியின் (microscope) அடியில் வைத்துப் பார்ப்பதற்காக அனுப்பப்படும்.

உங்களுக்கு ஆண்மைச் சுரப்பிப் புற்றுநோய் இருக்கிறதா என்பதைக் கண்டுபிடித்துச் சொல்லும் ஒரே நிச்சயமான வழி உயிர்த்திசுப் பரிசோதனைதான். எவ்வளவு வேகமாகப் புற்றுநோய் வளரமுடியும் அத்துடன் அது எவ்வளவு பயங்கர அச்சுறுத்தலாக இருக்கலாம் என்பதையெல்லாம் உயிர்த்திசுப் பரிசோதனை காட்டிவிடும். இது ‘தீவிரத்தன்மை’ என்று அழைக்கப்படும் அத்துடன் அது சிகிச்சையைத் தேர்ந்தெடுக்கவும் வழிகாட்டும்.

**இந்த அறிகுறிகள் எனக்கு இல்லையென்றாலும், ஆண்மைச் சுரப்பிப் புற்றுநோய்க்காக நான் பரிசோதனை செய்ய வேண்டுமா?**

சில வருடங்களாக, சிகிச்சையின் பக்க விளைவுகளின் அடிப்படையில் ஆண்மைச் சுரப்பிப் புற்றுநோய்க்கான பரிசோதனைகளைப் பற்றிய விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேற்பட்ட எல்லா ஆண்களும் தவறாமல் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்று சிலர் நம்புகிறார்கள். ஆனால் மற்றும் சிலர் அது அவர்களுடைய குடும்ப வரலாறு மற்றும் சொந்தச் சூழ்நிலைகளின் அடிப்படையில் ஒவ்வொரு ஆணுக்குமான விருப்பத்தைப் பொறுத்தது என நம்புகிறார்கள்.

தற்போது, நாங்கள் ஆண்மைச் சுரப்பிப் புற்று நோய்க்கு எல்லா ஆண்களையும் பரிசோதனை செய்ய ஊக்குவிப்பதில்லை. இந்த நிலையில், ஆண்மைச் சுரப்பிப் புற்றுநோயினால் ஆண்கள் இறப்பதை இப்பரிசோதனை தடுக்கும் என்பதற்கு நம்பகமான ஆதாரங்கள் எதுவும் இல்லை.

இருப்பினும், வழக்கமான சோதனைகளால் பயன் எதுவுமில்லை என்று எங்களால் அறுதியிட்டுச் சொல்ல முடியவில்லை. ஆகவே பரிசோதனை வேண்டவே வேண்டாமென எதிர்த்தும் நாங்கள் ஆலோசனை சொல்வதில்லை. ஆராய்ச்சிகள் சரியான நேரத்தில் இத்தகைய கேள்விகளுக்குப் பதில் சொல்லக்கூடும்.

உங்கள் மருத்துவரிடம் பேசி, ஆண்மைச் சுரப்பிப் புற்றுநோய்ப் பரிசோதனையைப் பற்றிய முடிவை எடுப்பதுதான் மிகச்சிறந்தது என நாங்கள் நம்புகிறோம்.

எல்லாப் பிரச்சினைகளையும் பின்வரும் வழிகளில் பரிசீலிக்குமாறு நாங்கள் ஆலோசனை வழங்குகிறோம்:

- Cancer Helpline;(புற்றுநோய் உதவி இணைப்பில்) உள்ள எங்கள் புற்றுநோய்ச் செவிலியரிடம் பேசுங்கள்
- ஆண்மைச் சுரப்பிப் புற்றுநோய்ப் பிரச்சினைகள் மற்றும் சிகிச்சை பற்றிய எங்கள் தகவல்களைப் படியுங்கள்
- www.prostatehealth.org.au என்ற ஆண்மைச் சுரப்பிப் புற்றுநோய் இணைய தளத்துக்குச் செல்லுங்கள்
- ஆண்மைச் சுரப்பிப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஆண்களுடன் பேசுங்கள்
- உங்கள் மருத்துவரிடம் பேசுங்கள்.

முடிவு உங்கள் கையில்தான் உள்ளது. உங்களுக்குத் தேவையான தகவல்களை நீங்கள் கண்டுபிடிக்க நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்.

**ஆண்மைச் சுரப்பிப் புற்றுநோய்க்கான சிகிச்சைகள் யாவை?**

உங்களுக்கான மிகச் சிறந்த செயல்முறைகள் எதுவென உங்கள் மருத்துவர் எண்ணுகிறாரோ அதை உங்களுக்கு அவர் ஆலோசனையாகத் தருவார். சிகிச்சை பின்வருபவைகளைப் பொறுத்தது:

- புற்றுநோயின் அளவு
- அது பரவியுள்ளதா
- உங்கள் வயது
- நீங்கள் எவ்வளவு ஆரோக்கியமானவர் என்பது.

உங்களுக்கு ஆண்மைச் சுரப்பிப் புற்றுநோய் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால், உங்கள் மருத்துவர் பின்வரும் சில தெரிவுகளை உங்களுடன் விவாதிக்கலாம்:

**சிகிச்சை இல்லை**

சில நேரங்களில் ஆண்மைச் சுரப்பிப் புற்றுநோய் மெதுவாக வளர்ந்தாலோ அல்லது அச்சுறுத்தல் எதுவும் இல்லையென்றாலோ சிகிச்சை தேவையில்லை. மாறுதல் எதுவும் இருக்கிறதா என்பதைக் காண மருத்துவர் வழக்கமான பரிசோதனைகள் செய்யலாம். பின்னாளில் புற்றுநோய் வளர ஆரம்பிக்கும்போது, நீங்கள் சிகிச்சை பெற ஆரம்பிக்கலாம்.

**அறுவை சிகிச்சை.ஃகதிரியக்கச் சிகிச்சை**

புற்றுநோய் பரவாமல் இருந்தால், ஆண்மைச் சுரப்பியை அறுவை சிகிச்சை மூலம் நீக்கி விடலாம் அல்லது கதிரியக்கச் சிகிச்சை மூலம் புற்றுநோயை அழிக்க முயற்சிக்கலாம்.

கதிரியக்கச் சிகிச்சையைப் பின்வரும் ஏதாவதொரு முறையில் கொடுக்கலாம்:

- ஒரு இயந்திரத்தைக் கொண்டு உடலுக்கு வெளியே இருந்து கதிர்களை புற்றுநோயை நோக்கிச் செலுத்துவது. இது வெளிக் கற்றை கதிரியக்கச் சிகிச்சை என்று அழைக்கப்படும் <u>அல்லது</u>
- கதிரியக்க ஆதாரத்தை உடலின் உள்ளே எங்கே புற்றுநோய் இருக்கிறதோ அங்கே அறுவை சிகிச்சை மூலம் வைத்து விடுவது. இது குறுஞ்சிகிச்சை (brachytherapy) என்று அழைக்கப்படும்.

**ஹார்மோன் சிகிச்சை**

புற்றுநோய் பரவிவிட்டால், அதன் வேகத்தைக் குறைக்க அல்லது அதை நிறுத்த உங்களுக்கு ஹார்மோன் சிகிச்சை கொடுக்கப்படலாம். சில ஆண்களுக்குக் குறுஞ்சிகிச்சை கொடுக்கப்படுவதற்கு முன் ஹார்மோன் சிகிச்சை கொடுக்கப்படும்.

**சிகிச்சையில் சிக்கல்கள் எவையேனும் உள்ளனவா?**

ஆண்மைச் சுரப்பிப் புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை அல்லது கதிரியக்கச் சிகிச்சையில் மூன்று முக்கியச் சிக்கல்கள் இருக்கக்கூடும்.

1. அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு பெரும்பாலும் ஆண்கள் விரைப்புத் தன்மையை இழந்து விடக்கூடும். (அவர்களுக்கு 'மலட்டுத் தன்மை' ஏற்பட்டுவிடும்). இது பெரும்பாலும் நீங்கள் வயது முதிர்ந்தவராயின் ஏற்படலாம். இது ஏற்படக் காரணம் என்னவென்றால், விரைப்புத் தன்மை ஏற்படக் காரணமான நரம்புகள் ஆண்மைச் சுரப்பி வழியாகச் செல்லுகின்றன. சில சமயங்களில் புற்றுநோய் அமைந்திருக்கும் நிலையின் காரணமாக இந்த நரம்புகள் சேதப்படுத்தப்படுவது தவிர்க்க இயலாமல் போய்விடுகிறது.

2. அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு, சில ஆண்கள் சிறுநீரைக் கட்டுப்படுத்தும் திறனை இழந்துவிடலாம். (அவர்கள் கழிவு முனைப்புகளை அடக்கமுடியாமல் போய்விடுவர்). இதற்குக் காரணம் ஆண்மைச் சுரப்பியைச் சுற்றிய தசைகளில் சேதம் ஏற்படுவதுதான். அநேக ஆண்களுக்கு கட்டுப்பாட்டை இழக்கும் தன்மை ஒரு சில மாதங்களுக்கு மேல் நீடிக்காது.

3. கதிரியக்கச் சிகிச்சையானது விரைப்புத் தன்மை, கட்டுப்பாட்டை இழக்கும் தன்மைகளில் பிரச்சினைகளை உருவாக்கக்கூடும். அது மலக்குடலையும் பாதிக்கலாம். சிகிச்சை எடுக்கும் சமயத்தில் உங்களுக்கு வயிற்றுப் போக்கு ஏற்படலாம் அல்லது மலக்குடல் சேதம் ஏற்பட்டுச் சிகிச்சை தேவைப்படலாம்.

சிகிச்சையில் ஏற்படும் சிக்கல்களுக்கு உதவி கிடைக்கும். சிகிச்சைக்கான முடிவு எடுக்குமுன் உங்கள் மருத்துவரிடம் பேசுங்கள்.

## Multilingual Cancer Information Line
**(பன்மொழிப் புற்றுநோய்த் தகவல் இணைப்பு)**

புற்றுநோய்ச் செவிலியருடன் நீங்கள் விரும்பிய மொழியில், மொழிபெயர்ப்பாளர் ஒருவர் மூலம் பேச வேண்டுமென்றால் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றவும்:

1. Translating and Interpreting Service (மொழிபெயர்த்தல் மற்றும் மொழிபெயர்த்துரைத்தல் சேவையை) 13 14 50 என்ற எண்ணில், திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை, காலை 9 - 5 மணிக்குள் அழைக்கவும்.
2. உங்களுக்குத் தேவையான மொழியைக் குறிப்பிடவும்.
3. மொழிபெயர்ப்பாளர் வரும்வரை இணைப்பிலே காத்திருக்கவும் (3 நிமிடங்கள் வரை ஆகலாம்).
4. Cancer Council Helpline (புற்றுநோய்க் கழகம் உதவித் தொலைபேசி இணைப்பை) 13 11 20 என்ற எண்ணில் தொடர்பு ஏற்படுத்தித் தருமாறு மொழிபெயர்த்துரைப்பாளரைக் கேட்கவும்.
5. மொழிபெயர்த்துரைப்பாளருடனும், புற்றுநோய்ச் செவிலியர் ஒருவருடனும் உங்களுக்கு இணைப்பு ஏற்படுத்தித் தரப்படும்.

மேலும் புற்றுநோய்த் தகவல்களை உங்கள் மொழியில் பெறுவதற்கு அல்லது மற்ற மொழிகளில் இந்த மெய்த்தகவல் தாளைப் பெற www.cancervic.org.au/multilingual என்ற இணையதளத்துக்குச் செல்லவும்.

**கடைசியாகப் புதிப்பிக்கப்பட்டது: நவம்பர் 2011**

Cancer Council Helpline 13 11 20 www.cancervic.org.au